புனித அந்தோனியார் கல்லூரி
ஊர்காவற்றுறை

# பரிசளிப்பு தினம் 2005 / 2006

10.07.2007
செவ்வாய்க்கிழமை
காலை 10.00 மணி

பிரதம விருந்தினர்
திரு.பொன் பாலசுந்தரம்பிள்ளை
*புவியற்துறை வாழ்நாள் பேராசிரியர்*
*முன்னைநாள் துணைவேந்தர்*
*யாழ் பல்கலைக் கழகம்*

திருமதி இராஜலட்சுமி பாலசுந்தரம்பிள்ளை

தலைவர்
அருள்திரு ஜே.ஏ.ஜேசுதாஸ்
அதிபர்

## நிகழ்ச்சி நிரல்

- பிரதம விருந்தினரை பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்துவரல்
- பாடசாலைக் கொடி ஏற்றுதலும் கீதம் இசைத்தலும்
- உத்தியோகஸ்தர் அறிமுகம்
- வரவேற்பு நடனம்
- மங்கள விளக்கேற்றுதல்
- இறைவணக்கம்
- வரவேற்புப்பாடல்
- அதிபர் அறிக்கை
- பிரதம விருந்தினர் உரை
- பரிசில்கள் வழங்கல்
- கலைநிகழ்ச்சி நாட்டுக் கூத்து-பண்டாரவன்னியன்
- நன்றியுரை
- தமிழ்த் தாய் வாழ்த்து

## வரவேற்பு நடனம்

வருக வருக வருகவே
வாழ்த்துகின்றோம் வருகவே
வண்ண மலர் மாலை சூடி
வரவேற்போம் வருகவே (வருக வருக)

தீவகம் பெற்றெடுத்த சுந்தரனே - எங்கள்
கலைக்கூடம் சிறக்கவந்த தலைமகனே (2)
அவர் துணை தேர்ந்த அன்னை லஷ்மியே- உம்மை
அன்புடன் இங்கு நாம் வரவேற்போம் வருகவே

அந்தோனி குடும்பத்தின் முதல்மகனே - எங்கள்
தேவையில் சேவகனாய் வாழ்பவரே (2)
ஜேசுவுடை தாசனாய் இருப்பவரே - உம்மை
இன்முகத்தோடு நாம் வரவேற்றோம் வருகவே

பெற்றோர் பெரியோரே சோதரரே - இங்கு
பெருமகிழ்வோடு வரும் ஆர்வலரே (2)
நற்றுணையாகி நிற்கும் நல்லவரே - உம்மை
நர்த்தனம் புரிந்து நாமும் வரவேற்றோம் வருகவே.

## இறைவணக்கம்

இறைவணக்கம் இனிதாய்ப்பாடி
இறைவா உம்பெயர் புகழ்கின்றோம்
சங்கமமாகி சபைதனில்வாரும்
சரணம் சரணம் இறைவனே (2)

உலகாழும் இறைவா உறவாடவருவாய் - எம்
உணர்வோடு இன்றும் அவைதனில் அமர்வாய்
சக்தியும் நீயே
சாந்தியும் நீயே } 2
சரணம் சரணம் திருவடி சரணம்
உலகம் அமைதிபெற உண்மை உயர்வு பெற
விரைவாய் வருவாய் பரமனே
எமது பணி சிறக்க கல்லூரி உயர்வடைய
வரம் பல அருள்வாய் வேந்தனே

காக காக பகரிக ரிகரி ரிரிஸா
ரீரி ரீரி கரிஸக ரிஸ கரிஸா
ஸா ஸா ஷ ககாக மமாம பபாப
ஸாஸ ரீரி ஸரிஸா ஸாரி ஸரிஸா

இருளினை அகற்றி ஒளியினை ஏற்ற - எம்
இகயத்திற் கென்றும் மெய்ஞானம் தருவாய்
வழியும் நீயே
வாழ்வும் நீயே } 2
சரணம் சரணம் உனதடி சரணம்
உலகம் அமைதிபெற உண்மை உயர்வு பெற
விரைவாய் வருவாய் பரமனே
எமது பணி சிறக்க கல்லூரி உயர்வடைய
வரம் பல அருள்வாய் வேந்தனே

# வரவேற்புப்பாடல்

இராகமாலிகை

*இராகம் : சிந்தோளம்*
அந்தோனிகுடும்பத்தின் பரிசில் நாளாம்
சிறப்போடு நாமெல்லாம் மகிழும் திருநாளாம்

புவியியல் புயலாம் சுந்தரவதனனே
பாலசுந்தரம் ஐயா அம்மணி அதிதியே

*இராகம் : கானடா*
தூவகம் பெற்ற சுந்தர வதனன்
அந்தோனிகல்லூரி அற்புத மாணவன்
புவியியல் துறையின் புத்தொளி வீசிடும் -முன்னாள்
பல்கலை வேந்தரே வருக வருகவே

*இராகம் : சண்முகப்பிரியா*
பண்பினில் ராஜ லக்ஸ்மியாகியே
கல்வியை வழங்கிய வித்தகி அன்னையே
பலநலம் பெற்று பாங்காய் வாழ்ந்திடும்
சுந்தரன் பத்தினி வருக வருகவே

*இராகம் : பந்துவராளி*
அந்தோனி குடும்பத்தின் அமுத சுரபியே
யேசுவின் தாசனே இனிய முதல்வனே
கல்வி கலையோடு ஆன்மீக அமுதத்தை
அள்ளி வழங்கிடும் வள்ளளே வருகவே

*இராகம் : மத்தியமாவதி*
கல்விஅதிகாரிகளே - பெற்றோர்களே நம்
பழையமாணவரே பண்புசால் பெரியோரே
நல்வரவ சொல்லி நமஸ்காரம் செய்தே
வருக வருகவென வாழ்த்தி வரவேற்கின்றோம்

## 2005 ம் 2006 ம் ஆண்டுகளிற்கான அதிபரின் அறிக்கை

கடந்த இரண்டு ஆண்டுகளிற்கான பரிசளிப்பு விழாவினை சிறப்பிக்க வருகை தந்துள்ள எமது பிரதம விருந்தினர், புவியியற்துறை வாழ்நாள் பேராசிரியர், பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களே, அவர்தம் பாரியார் அவர்களே,
தூவக மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அதூத அக்கறையுடன் உழைத்து வரும் எமது வலயக் கல்விப்பணிப்பாளர் அவர்களே ,
ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்களே,
பிரதிக்கல்விப்பணிப்பாளர்களே, உதவிக் கல்விப் பணிப்பாளர்களே,
ஆசிரிய ஆலொசகர்களே,
அருட்தந்தையர்களே, அருட்சகோதரிகளே
அயற்பாடசாலைகளின் அதிபர்களே, ஆசிரியர்களே
பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களே
பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே
பெற்றோர்களே, நலன் விரும்பிகளே
எனது அன்பான ஆசிரியர்களே கல்விசாரா ஊழியர்களே
அன்புநிறை மாணவச் செல்வங்களே
உங்கள் அனைவருக்கும் இனிய வணக்கம் கூறி அன்புடன் வரவேற்கின்றேன்.

பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய சாதனை ஆண்டான 2005 ற்குரியதும் பல சவால்களுக்கு முகம்கொடுத்த ஆண்டான 2006 ற்குரியதுமான ஆண்டறிக்கையினை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

2005 ம் ஆண்டிற்கான பரிசளிப்புத் தினத்தை சென்ற ஆண்டு துர்அதிஸ்ட விதமாக நடாத்த முடியாமல் போனதைதையிட்டு எனது மனவருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது இன்றைய நிகழ்வின் பிரதம விருந்தினராக இங்கு மேடையை அலங்கரித்திருக்கும் புவியியற் துறையின் வாழ்நாள் பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் எமது தூவக மண்ணின் மைந்தனும் எமது கல்லூரியின் பழைய மாணவருமாவார். நுங்கள் கற்ற இக்கல்லூரியை பெருமையுடன் எடுத்துக் கூறிவருவதும் இன்றை தினம் எம்மத்தியில் பிரசன்னமாகியிருப்பதும் எமது கல்லூரியின் புகழையும் பெருமையையும் பறை சாற்றுவதாகவேயுள்ளது.

வாழ்நாள் பேராசிரியராக இருக்கும் தாங்கள் கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயத்திலே ஆரம்பக்கல்வியை பயின்று பின் எமது கல்லூரியிலே இடைநிலைக் கல்வியை 1950–54 காலப்பகுதியில் கற்று பின் யாழ் இந்துக் கல்லூரியில் இணைந்து கொண்டீர்கள். 1961–65 காலப்பகுதியில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பினையும் 1969–72 காலப்பகுதியில் டேகாம் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப்பட்டத்தை நிறைவு செய்து புவியிற்துறையில்

விரிவுரையாளராக, பேராசிரியராக, வருகைநிலை பேராசிரியராக, துறைத் தலைவராக, பிடாதிபதியாக இங்கும் வெளிநாடுகளிலும் பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் சேவையாற்றிப் பின் யாழ்பல்கலைக்கழகத்திலே துணை வேந்தராகி இரண்டுமுறை இப்பதவியை 1993 – 2000 ம் ஆண்டு காலப்பகுதியில் வகித்துள்ளார்கள். இதைத்தவிர பல பல்கலைக் கழகங்களினால் வழங்கப்பட்ட பல கௌரவப் பட்டங்களையும் பெற்றுள்ளார்கள்

யாழ் பல்கலைக் கழகத்தில் பல உயர் குழுக்களிற்கு தலைமைவகித்த தாங்கள், பல பயனுள்ள திட்டங்களைத் தூட்டி புதிய பல பயிற்சி நெறிகளை ஆரம்பித்து சிறந்ததோர் கல்விமானாகத் திகழ்ந்தார்கள். ஓய்வு வயதிற்கே தவிர சேவைக்கல்ல என்றாற் போல் கல்விப் புலத்திற்கு வெளி மீளக்குடியமர்தலுக்கும் புனர்வாழ்விற்குமான அதிகாரசபை, சமாதானத்திற்கு நல்லெண்ணத் திற்குமான சபை போன்றவற்றில் தங்கள் தலைமைத்துவ சேவையை வழங்கி அகில இலங்கை சமாதான நீதவானாகவும் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றார்கள்.

திருமதி இராஜலக்ஸ்மி பாலசுந்தரம்பிள்ளை அவர்களே, சிறந்த ஆசிரியராக சேவையாற்றி ஓய்வுபெற்ற தாங்கள் அன்பான அன்னையாக, கனிவுநிறை துணைவியாகவிருந்து அறிவுநிறை பிள்ளைகளை உருவாக்கிய நல்லாசான் என்ற வகையில் எங்கள் மத்தியில் இருப்பதில் மகிழ்ச்சியடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

கல்வியையும் விளையாட்டையும் இரு கண்களாகக் கருதும் எமது கல்லூரி இரண்டு விடயங்களிலும் சாதனை படைத்த ஆண்டாக 2005 திகழ்கின்றது. க.பொ.த உயர்தரத்தில் செல்வி தெ.துஸ்யந்தினி எல்லாப் பாடங்களிலும் திறமைச்சித்தி (3A) பெற்று பல்கலைக்கழகம் சென்றமையும் எமது உடற் பயிற்சி அணி உடற்பயிற்சிப் போட்டியில் தேசிய மட்டத்தில் 2ம் இடம் பெற்றமையும் இவற்றில் குறிப்பிடத் தக்கவையாகும். இவர்களை இவ்விடத்தில் மனமாரப் பாராட்டுவதோடு இவர்களின் வெற்றிக்கு வழிசமைத்துக் கொடுத்த ஆசிரியர்களிற்கும் பயிற்றுவிப்பாளருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## மாணவர் விபரம்

2005 ல் 405 ஆக இருந்த மாணவர் தொகை 2006 ல் 444 ஆக அதிகரித்தது. எனினும் இவ்வாண்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக 50 க்கும் அதிகாமான மாணவர்கள் சொந்த ஊரையும் கல்லூரியையும் விட்டு வெளியேற வேண்டியதாயிற்று.

கிறிஸ்துஇல்ல விடுதியில் 2005 ல் 67 மாணவர்கள் தங்கி கல்விகற்று வந்தனர் 2006 ல் இது 90 அதிகரித்திருந்தது. எனது தனிமுயற்சியாக

ஆரம்பிக்கப்பட்ட இவ்விடுதிக்கு யாழ் ஆயர் அவர்களிடமிருந்தும் உறவினர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் போன்றவற் றிடமிருந்தும் உதவிகளைப் பெற்று நிரந்தர இரண்டு மாடிக்கட்டடம் ஒன்றை அமைக்கும் பணி 2006ல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவருக்கும் இவ்விடத்தில் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு தொடர்ந்தும் உங்கள் உதவியை எதிர்பார்த்திருக்கின்றோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## ஆசிரிய ஆளணி

ஒப்பூட்டளவில் 2005, 2006 ல் பல புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் சில பாட ஆசிரியர்களிற்கு தொடர்ந்தும் பற்றாக்குறை உள்ளது.

2005ன் ஆரம்பத்தில் 23 ஆசிரியர்கள் சேவையாற்றி வந்தனர். தை முதல் ஐப்பசிவரையான காலத்தில் 10 புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு நீண்டகாலமாக இருந்த ஆசிரியர் பற்றாக்குறை ஓரளவு தீர்க்கப்பட்டது எனினும் அதே காலப்பகுதியில் 4 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச்செல்ல ஒரு ஆசிரியர் பல்கலைக்கழகத்தில் தனது கற்கை நெறியினை தொடர கற்கை விடுமுறையில் சென்றார். புதிதாக நியமனம் பெற்றவர்களில் 04 பேர் பட்டதாரிகள் 02 பேர் கல்விக் கல்லூரி பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஏனையோர் தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்கள்.

2006 ஆரம்பத்தில் 28 ஆசிரியர்கள் சேவையாற்றிய போதும் அவ்வருடத்தில் 08 ஆசிரியர்கள் பல்வேறு காரணங்களால் படசாலையி லிருந்து விலக வேண்டியதாயிற்று. இவர்களில் ஒருவர் திருமணத்தின் பின் வெளிநாடு செல்ல இருவர் ஆசிரிய கலாசாலைக்கும் இருவர் தற்காலிக இடமாற்றத்திலும் 03 பேர் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றும் சென்றனர். வருட முடிவில் ஆசிரியர் தொகை 20 ஆயிற்று.

தினம்தோறும் பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுத்து பிரயாணம் மேற் கொண்டு கற்பித்து வரும் ஆசிரியர்களை நன்றியுடன் இவ்விடத்தில் நினைவு கூருகின்றேன். சாதாரணமாக அரை மணிநேரத்தில் கடக்கவேண்டிய தூரத்தை ஒன்றரை மணிநேரம் செலவழித்து கடக்கவேண்டியிருப்பது ஒன்றே அவர்களின் பிரயாண கஸ்டத்தினை எடுத்துக் காட்டும் சுட்டியாகும்.

## கல்வி அபிவிருத்தி

மாணவர் கல்வி அபிவிருத்தியின் சுட்டியாக விளங்கும் க.பொ.த சா த மற்றும் உயர்தர பெறுபேறுகளில் சிறந்த முன்னேற்றம் காணப்பட்டுள்ளமையை சிறப்பாக குறிப்பிட முடியும். 2005 ல் கா.பொ.த சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றியோரில் 49 வீதமானோர் உயர்தரத்தில் கல்வி கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். உயர்தரப்பரீட்சையில் 2005ல் தோற்றியோரில் 67

வ²தமானோர் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்க தகுதிபெற்றுள்ளதோடு 3A சிறந்த பெறு பேறாகவுமுள்ளது. 2006 ல் கா.பொ.த சாதாரணதரப்பா²ட்சைக்குத் தோற்றியோரில் 54 வ²தமானோர் உயர்தரத்திற்கு சித்திபெற்றுள்ளனர். 2006 ல் உயர்தரப் பா²ட்சைக்குத் தோற்றியோரில் 69 வ²தமானோர் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்க தகுதிபெற்றுள்ளனர்.

2006 ல் கணனி கற்கை நிலயம் (CLC) திறந்து வைக்கப்பட்டபின்னர் அனைத்து மாணவர்களுக்கும் அடிப்படைக் கணனிப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்பிரதேசத்திலுள்ள உள்ள மாணவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்றால் மிகையாகாது.

கா.பொ.த சாதாரண மாணவர்களுக்கான விசேட செயற்திட்டங்கள் 2005 2006 ம் ஆண்டுகளில் தொடர்ந்து அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இது மாணவர் கல்வி முன்னேற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் ஓர் காரணியாகவுமுள்ளது. 12 மாணவர்கள் வலயக்கல்வி அலுவலகத்தினால் வழங்கப்பட்டு வரும் புலமைப்பரிசில்களினால் பயன்பெற்று வருகின்றனர்.

## அஞ்சலிகள்

2006 ம் ஆண்டு ஆவணி மாதம் 11 ம் திகதி தூவுப்பகதிகளில் திடீரென ஆரம்பமான மோதல்கள் எமது கல்லூரிச் சமூகத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. எமது கல்லூரி மாணவன் செல்வன் திருவிளங்கம் கஜேந்திரன் மண்கும்பான் பகுதியில் இடம்பெற்ற எறிகணை வ²ச்சுக்களில் காயப்பட்டு உயிரிழந்தார். அதே தினத்தில் அல்லைப்பிட்டியில் 2004 ல் க.பொ.த சா.தரத்தில் தோற்றிய மாணவன் செல்வன் சலமன் மொறிஸ் அமலதாஸ்உயிரிழந்தார். ஊர்காவற்றுறையில் 14.10.2006 ல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் தரம் 10 மாணவன் செல்வன் அல்பிறட் சாள்ஸ் உயிரிழந்தார். எமது கல்லூரியின் பழையமாணவன் டானியல் குயின்ரனியும் இக்காலத்தில் உயிரிழந்தார். எமது கல்லூரி மாணவன் நித்திய நிரஞ்சனின் தந்தை எமிலியானுஸ் மற்றும் த.சபேசனின் வின் தந்தை தவசு²லனும் வெவ்வேறு சம்பவங்களில் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி உயிரிழந்தனர். இவர் அனைவருக்கும் எமது இதய அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பிரிவுபசாரம்

கடந்தசில வருடங்களாக எமது கல்லூரியிலே கடைமைபுரிந்து பின் மாற்றலாகிச் சென்ற திரு.சி.எல்டபிள்யு.பற்றிக், திருமதி பாரதிதாசன், செல்வி. யோ.கந்தையா, செல்வி.கே.சின்னத்தம்பி, ஆகியோரின் சேவையைப்பாராட்டி பிரிவுபசாரவிழா 2005 ல் நடைபெற்றது.

## பௌதீக வள அபிவிருத்தி

### கணணி கற்கை நிலயம்
பௌதீக வள அபிவிருத்தியில் அதிக வளங்களைப் பெற்றுக் கொண்ட ஆண்டுகளாக அறிக்கைக்குரிய ஆண்டுகள் திகழ்கின்றன, நூலகம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூடம் என்பவற்றை சிறப்பாக குறிப்பிடலாம். இவற்றில் கணணிகற்கை நிலயம் 2005 ஆனி 13 ல் அத்திவாரம் இடப்பட்டு 23-11-2006 ல் எமது கோட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதற்குரிய கணணிகள் பொருத்தப்பட்டிருப்பினும் உரிய ளபாடங்களும் சில கருவிகளும் போக்குவரத்துப் பிரச்சனை காரணமாக வந்து சேராதுள்ளது. இதற்கென தனியான தொலைபேசி இணைப்பைப் பெற்றுக் கொள்ளும் முயற்சி இதுவரை பயனளிக்கவில்லை.

### நூலகம்
நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டில் அரைவாசியினை 2006 ல் திணைக்களம் ஒதுக்கியிருந்த போதும் கட்டிடப் பொருட்களின் தட்டுப்பாட்டினால் அத்திவாரமட்டம் வரையான வேலையையே செய்துமுடிக்கக் கூடியதாகவிருந்தது.

### விஞ்ஞான ஆய்வு கூடம்
விஞ்ஞான ஆய்வு கூடத்திற்காக கேள்விப்பத்திரம் கோரப்பட்டபோது ஒப்பந்த காரர் எவரும் பொருட்தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் காரணமாக இவ்வேலைக்கு விண்ணப்பிக்காத நிலையில் இந்நிதி திரும்பிச்செல்லும் நிலையேற்பட்டது. இந்நிலையில் நாம் சில ஒப்பந்தக்காரர்களிடம் கலந்துரையாடி கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வேலை ஆரம்பிக் கப்பட்டு அத்திவாரமட்டம் வரை கட்டப்பட்டு கட்டிடப் பொருட்களின் தட்டுப்பாட்டினால் வேலை தடைப்பட்டுள்ளது.

### போட்டோ பிரதி இயந்திரம்
எமது கல்லூரியின் அவசர தேவைகளில் ஒன்றான போட்டோ பிரதி இயந்திரத்தினை பெற்றுக் கொள்வதற்காக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஸ்னன் அவர்கள் நாம் வேண்டிக் கொண்டதற்கிணங்க தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தின் கீழ் அதற்கான நிதியை ஒதுக்கியிருந்தார். அந்நிதியிலிருந்து ஐப்பசி 2006 ல் போட்டோ பிரதி இயந்திரத்தினைக் கொள்வனவு செய்துள்ளோம். அவருக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## மதிய உணவு

உலக உணவுத்திட்டத்தின் கீழ் தரம் 6 – 9 மாணவர்களிற்கு மதிய உணவு வழங்கும் திட்டம் 2004 மார்கழி தொடக்கம் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. 2005, 2006ம் ஆண்டுகளில் பல்வேறு வழிகளில் இடையுறுகள் எற்பட்ட போதிலும் இத்திட்டத்தை சீராக அமுல்படுத்தி வருவதோடு பழைய மாணவர் சங்கங்களின் உதவியோடு தரம் 10– 13 மாணவர்களுக்கும் தொடர்ந்தும் அமுல்படுத்தி வருகின்றோம். வறுமைக் கோட்டின்கீழ் வாழும் பெரும்பான்மையான மாணவர்கள் உள்ள எமது கல்லூரிக்கு இத்திட்டம் உண்மையிலேயே மிகவும் பயனுள்ள திட்டம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

## மைதான அபிவிருத்தி

பல முக்கிய விளையாட்டு நிகழ்வுகளின் மையமாக இருக்கும் எமது கல்லூரியின் மைதான அபிவிருத்தி தொடர்பாக நீண்டகாலம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2000 ஆண்டளவில் உதவி அரசாங்க அதிபரினால் இத்திட்டத்திற்காக வழங்கப்படுவதாக ஒதுக்கப்பட்ட காணியில் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தினரிற்காக ஒதுக்கப்பட்ட நிலம் தவிர்ந்த ஏனைய பகுதி நில அளவைத்திணைக்களத்தினால் அளக்கப்பட்டு 400 மீற்றர் ஓடுபாதை அமைக்கக்கூடியவாறு எல்லைகள் குறிக்கப்பட்டுள்ளதுடன் 2005ம் 2006 ம் ஆண்டுகளில் தற்போதய உதவி அரசாங்க அதிபரின் ஒத்துழைப்போடு வேலைக்கான உணவுத்திட்டத்தின் கீழ் ஓரளவிற்கு மண் நிரப்பப்பட்டள்ளது. இதன் பூரண அபிவிருத்திக்காக நாம் இன்னும் நீண்டதூரம் செல்ல வேண்டியுள்ளது. இதற்காக நாம் பலரின் உதவியையும் நாடி நிற்கின்றோம்.

## பரிசளிப்பு தினம்

2004ம் ஆண்டிற்கான பரிசளிப்பு தினம் 23.06.2005 அன்று சிறப்பாக் நடைபெற்றது. முன்னைநாள் மாகாணக்கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

## மன்றங்கள்

எமது கல்லூரியில் தொடர்ந்து இயங்கிவரும் உயர்தர மாணவர் மன்றம், கத்தோலிக்க மாணவர் மன்றம், இந்து மாணவர் மன்றம், சாரணியம், சென் ஜோண்ஸ் அம்புலன்ஸ் போன்றவை தொடர்ந்தும் மாணவர் ஆளுமை விருத்தியிலும் சேவை செய்வதிலும் சிறப்பாக செயற்பட்டு வருகின்றன. இவை முறையே உயர்தர மாணவர் ஒன்றுகூடல், ஒளிவிழா, சரஸ்வதி பூசை போன்ற முக்கிய நிகழ்வுகளை உரிய ஆண்டுகளில் சிறப்பாக நடத்தியிருந்தன. எமது சுற்றாடலை சிறந்தமுறையில் பேணவும் மாணவரிடம் அது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவுமென 2005 ல் சுற்றாடல் குழு எமது கல்லூரியில் அமைக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றது.

## விளையாட்டு

விளையாட்டுத் துறையின் நன்மைகளை நன்கு அறிந்த கல்லூரி என்ற வகையில் அதற்குரித்தான இடத்தை சிறப்பாக பேணிவருகின்றது.

## உடற்பயிற்சி

எமது உடற்பயிற்சி அணி அயராத முயற்சியுடன் பயிற்சியில் ஈடுபட்டு 2005 ம் ஆண்டில் வலயம் , மாவட்டம், மாகாணம் என முன்னேறி தேசிய மட்டத்திற்குச் சென்று இரண்டாம் இடத்தைப் பெற்றமை உண்மையிலேயே எமது கல்லூரிக்கு பெருமை தேடித்தந்த சாதனையாகும். இதற்காக கடுமையாக உழைத்த எமது அணியை விசேடமாக பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த அணியைப் பயிற்றுவிப்பதில் ஆர்வத்துடன் ஈடுபட்ட எமது பழைய மாணவன் திரு.மெடோன் அவர்களிற்கும் ஏனைய பொறுப்பாசிரியர்களிற்கும் எனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். 2006 இலும் நாம் மாகாணமட்டம் சென்று முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட போதிலும் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக தேசிய மட்டத்தில் பங்குபற்ற முடியாமல் போயிற்று.

## மெய்வல்லுனர் போட்டிகள்

2005 ம் ஆண்டு மாசி 25 ல் நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியின் பிரதம விருந்தினராக எமது வலயக் கல்விப்பணிப்பாளர், அவர்கள் கலந்து சிறப்பித்தார். அந்த வருடத்தில் எமது கல்லூரி வலய மட்டத்தில் 185 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றதோடு பல மாணவர்கள் மாவட்ட மட்ட போட்டிகளிலும் பங்கு பற்றினர். 2006 ல் எமது உதவி அரசாங்க அதிபர் திரு.சிறிமோகனன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். இந்த ஆண்டிலும் நாம் முதலாம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## பெரு விளையாட்டுக்கள்.

உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் மற்றும் கிறிக்கெட் போன்ற விளையாட்டுக்களிலும் எமது அணிகள் சிறப்புடன் விளையாடி வருதோடு மாவட்ட மட்டத்தில் பல இடங்களையும் பெற்றுள்ளன.

## உள்ளக விளையாட்டுக்கள்

உள்ளக விளையாட்டுக்களில் பட்மின்ரன் மற்றம் செஸ் போன்றவற்றில் இவ்வருடமும் மாவட்டமட்டத்திற்கு சென்று பங்குபற்ற எமது அணிகள் தகுதி பெற்றிருந்தமையையும் இங்கு சிறப்பாக குறிப்பிட வேண்டும்.

## பழைய மாணவர் சங்கங்கள்

பல்வேறு நாடுகளில் வசித்துவரும் எமது பழைய மாணவர் சங்கங்கள் எமக்கு பல வழிகளிலும் உதவிகள் புரிந்து வருகின்றனர். கனடாவில்

இயங்கிவரும் பழைய மாணவர் சங்கம் (Kayts St.Antony's College Alumini association, Canada) வருடாந்தம் நடைபெற்று வரும் பரிசளிப்பு தினத்திற்காக பதக்கங்க ளையும் கேடயங்களை வழங்கிவருவதோடு பாடசாலை அபிவிருத்திச் சங்க த்தின் அன்றாட செயற்பாடுகளிற்கான நிதி உதவிகளையும் வழங்கிவருகின்றது. எமது மாணவர்களிற்கென இவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட பாவித்த கணனிகள் போக்குவரத்து இன்மையினால் கொழும்பில் தேங்கிப் போயிற்று.

2005 ம் ஆண்டில் புதிப்பிக்கப்பட்ட ஐரோப்பிய ஒன்றியத்திற்காக லண்டனில் இருந்து இயங்கி வரும் பழைய மாணவர் சங்கம் (St.Antony's College Kayts Alumini Association Europe)வருடாவருடம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்குத் தேவையான நிதியுதவிகளைச் செ வருகின்றது.

தென்னிலங்கையில் செயற்படும் சங்கமும் (St.Antony's College, Past Pupils' Association, South Ceylon Branch) அவ்வப்போது இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றது. இவர்களினால் யாழ் ஆயருடாக அன்பளிப்புச் செய்யப்பட்ட காணியிலேயே கணணி கற்கை நிலையமும் நூலகமும் அமைந்துள்ளமை இங்கு சிறப்பாக குறிப்பிடப்பட வேண்டும்.

ஊர்காவற்றுறையில் இயங்கிவரும் தாய்ச்சங்கமும் (St.Antony's College Old Boys Association) இயன்ற உதவிகளை செய்து வருகின்றது. ஆசிரிய தினம் மற்றும் பரிசளிப்பு தினம்போன்றவற்றிற்கு அன்பளிப்புகளை வழங்கி ஊக்குவித்து வருகின்றது. கல்லூரிதினத்தில் இவர்கள் எம்மோடு இணைந்து ஒன்றுகூடி இத்தினத்தை சிறப்பிப்பது ஓர் சிறப்பம்சமாகும்

இதைத் தவிர தனிப்பட்ட முறையிலும் பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் பல உதவிகளை செய்துவருகின்றனர். இவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## நன்றிகள்

அறிக்கைக்குரிய இரண்டு ஆண்டுகளிலும் மாணவர் கல்வியிலும் கல்லூரி வளங்களிலும் பல முன்னேற்றங்களிற்கு உந்து சக்தியாகவிருந்து செயற்பட்ட அனைத்த நெஞ்சங்களுக்கும் எனது பராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்வதோடு இன்றயதினம் இங்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்டு விழாவைச்சிறப்பித்த வாழ்நாள் பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை அவர்களுக்கும் அவரது பாரியார் அவர்கட்கும் ஏனய விருந்தினர்களுக்கும் எனது மணமாா்ந்த நன்றிகளைக் கூறி இவ்வறிக்கையினை நிறைவு செய்கின்றேன். நன்றி , வணக்கம்.

# 2005ம் 2006ம் ஆண்டுகளில் பரிசுகள் பெறும் மாணவர்கள் விபரம்

## ஒவ்வொரு தரத்திலும் பாடரீதியாக பரிசு பெறும் மாணவர்கள்.

| தரம் 6 2005 | 1ம் | 2ம் | 3ம் |
|---|---|---|---|
| தமிழ் | எஸ்.அருள்ராஜ் | ஜெ.ராஜ் ரொசின்ரன் | எஸ்றொக்சன் |
| கணிதம் | எம்.டினோசன் | எம்.கரிசன் | எஸ்.றொக்சன் |
| ஆங்கிலம் | எம்.ஆனல்ட் சரண்சன் | எஸ்.அருள்ராஜ் | ஏ.டியோனிஸ் |
| சுற்றாடல் | பி.வி.றொபின் றோய் | ஜெ.ராஜ் ரொசின்ரன் | எம்.கரிசன் |
| அழகியல் | ஏ.இ.அல்பிறட் யுட்சன் | பி.வி.றொபின் றோய் | எம்.ஆனல்ட் சரண்சன் |
| றோ.கத்தோ. | எஸ்.அருள்ராஜ் | பி.வி.றொபின் றோய் | ஏ.இ.அல்பிறட் யுட்சன் |
| சுகாதாரம் | ஏ.டியோனிஸ் | ஏ.இ.அல்பிறட் யுட்சன் | எஸ்.அருள்ராஜ் |

| தரம் 6 2006 | 1ம் | 2ம் | 3ம் |
|---|---|---|---|
| தமிழ் | எஸ்.நாகசுதன் | ஏ.டன்ஸ்ரன் | எஸ்.சுயாந் |
| கணிதம் | சி.வசந்தராஜ் | எஸ்.நாகசுதன் | ஏ.டன்ஸ்ரன் |
| ஆங்கிலம் | எஸ்.நாகசுதன் | ஏ.டன்ஸ்ரன் | ஏ.கரிவர்மன் |
| சுற்றாடல் | சி.வசந்தராஜ் | எஸ்.நாகசுதன் | எஸ்.சுயாந் |
| அழகியல் | எஸ்.நாகசுதன் | எஸ்.சுயாந் | ஏ.கரிவர்மன் |
| றோ.கத்தோ. | சி.வசந்தராஜ் | ஜெ.நோபேட் | ஏ.டன்ஸ்ரன் |
| இந்துசமயம் | எஸ்.நாகசுதன் | எஸ்.சுயாந் | ஏ.அபிகரன் |
| சுகாதாரம் | ஏ.டன்ஸ்ரன் | சி.வசந்தராஜ் | எஸ்.நாகசுதன் |

| தரம் 7 2005 | 1ம் | 2ம் | 3ம் |
|---|---|---|---|
| தமிழ் | ஏ.அல்பிறட் நியுட்டன் | பி.செந்தி ஜோண்சன் | ஜெ.அன்ரன் கஜுஸ்காந் |
| கணிதம் | ஏ.அல்பிறட் நியுட்டன் | ரி.தமிழ்ராஜ் | ஜெ.அன்ரன் கஜிஸ்காந்<br>எம்.நூல் கிளின்ரன் |
| ஆங்கிலம் | ஏ.அல்பிறட் நியுட்டன் | எஸ்.விதுசன் | பி.செந்தி ஜோண்சன் |
| விஞ்ஞானம் | ஜெ.அன்ரன் கஜுஸ்காந் | வை.பெனடிக்ற் | பி.செந்தி ஜோண்சன் |
| சமுகக்கல்வி | ஏ.அல்பிறட் நியுட்டன் | ஜெ.அன்ரன் கஜுஸ்காந் | எஸ்.விதுசன் |
| சித்திரம் | ஆர்.ரஜிதரன் | ஜெ.அன்ரன் கஜுஸ்காந் | எம்.நூல் கிளின்ரன் |
| சங்கீதம் | ரொனால்ட் விஜே | என்.ராஜன் | பி.செந்தி ஜோண்சன் |
| றோ.கத்தோ. | ஜெ.அன்ரன் கஜுஸ்காந் | ஏ.அல்பிறட் நியுட்டன் | பி.செந்தி ஜோண்சன் |
| சுகாதாரம் | ஏ.அல்பிறட் நியுட்டன் | ஜெ.அன்ரன் கஜுஸ்காந்<br>வை.பெனடிக்ற் | ஏ.மில்ரன் டினேஸ் |

| தரம் 7 2006 | 1ம் | 2ம் | 3ம் |
|---|---|---|---|
| தமிழ் | எம்.டினோசன் | எம்.கரிசன் | எஸ்.அருள்ராஜ் |
| கணிதம் | எம்.கரிசன் | எம்.ஆனல்ட் சரண்சன் | எம்.கெபின்சன் |
| ஆங்கிலம் | ஏ.ஜெ.அல்பிறட் யுட்சன் | வி.ரொக்சன் | எஸ்.அருள்ராஜ் |
| விஞ்ஞானம் | எஸ்.அருள்ராஜ் | எம்.ஆனல்ட் சரண்சன் | எம்.கெபின்சன் |
| சமுகக்கல்வி | எஸ்.அருள்ராஜ் | எம்.டினோசன் | எம்.ஆனல்ட் சரண்சன் |
| சித்திரம் | எஸ்.அருள்ராஜ் | எம்.மரியறூபன் | யோகநேசன் |
| சங்கீதம் | எம்.டினோசன் | எம்.கெபின்சன் | எம்.கரிசன் |

| | | | |
|---|---|---|---|
| றோ.கத்தோ. | எஸ்.அருள்ராஜ் | எம்.மரியரூபன் | எம்.டினோசன் |
| இந்துசமயம் | வி.ரொக்சன் | – | – |
| சுகாதாரம் | எம்.கெயின்சன் | எஸ்.அருள்ராஜ் | எ.ஜெ.அல்பிறட் யுட்சன் |

| தரம் 8 2005 | 1ம் | 2ம் | 3ம் |
|---|---|---|---|
| தமிழ் | கே.பத்மராஜா | எம்.சிவதரன் | கே.கிரிசாந் |
| கணிதம் | எம்.சிவதரன் | – | – |
| ஆங்கிலம் | கே.பத்மராஜா | எம்.சிவதரன் | கே.கிரிசாந் |
| விஞ்ஞானம் | கே.பத்மராஜா | எம்.சிவதரன் | எம். ஆரோக்கியதாஸ் |
| சமுகக்கல்வி | ஏ.அமிர்தஜஜுத் | ஏ.டொமின்கோ | ஏ.ஆன் டிக்ஸன் |
| சித்திரம் | என்.நகுலேஸ்வரன் | ஏ.சிவனுஜன் | ஏ.அமிர்தஜஜுத் |
| சங்கீதம் | ஏ.ஆன்டிக்ஸன் | கே.பத்மராஜா | ஜெ.யோகதாஸ் |
| றோ.கத்தோ. | ஜெ.யோகதாஸ் | எம்.ஆரோக்கியதாஸ் | கே.இருதயநேசன் |
| இந்துசமயம் | பி.மதிதரன் | எம்.சிவதரன் | கே.பத்மராஜா |
| சுகாதாரம் | கே.பத்மராஜா | கே.கிரிசாந் | எம்.சிவதரன் |

| தரம் 8 2006 | 1ம் | 2ம் | 3ம் |
|---|---|---|---|
| தமிழ் | ஏ.அல்பிறட் நியூட்டன் | என்.ராஜன் | ரி.தேவதர்சன் |
| கணிதம் | ஜெ.அன்ரன் கஜுஸ்காந் | ஏ.அல்பிறட் நியுட்டன் | ரி.திலேஸ் |
| ஆங்கிலம் | இ.வினோத் | ஏ.அல்பிறட் நியுட்டன் | பி.செந்தி ஜோன்சன் |
| விஞ்ஞானம் | ஏ.அல்பிறட் நியூட்டன் | ஜெ.அன்ரன் கஜுஸ்காந் | என்.ராஜன் |
| சமுகக்கல்வி | ஏ.அல்பிறட் நியூட்டன் | பி.செந்தி ஜோன்சன் | ஜெ.அன்ரன் கஜுஸ்காந் |
| சித்திரம் | ஆர்.ரஜிதரன் | ஜெ.அன்ரன் கஜுஸ்காந் | எஸ்.விதுசன் |
| சங்கீதம் | என்.ராஜன் | பி.செந்தி ஜோன்சன் | ரி.தமிழ்ராஜ் |
| றோ.கத்தோ. | ஜெ.அன்ரன் கஜுஸ்காந் | ஏ.அல்பிறட் நிட்டன் | ரி.தேவதர்சன் |
| சுகாதாரம் | ஜெ.அன்ரன் கஜுஸ்காந் | ஏ.அல்பிறட் நியூட்டன் | என்.ராஜன் |

| தரம் 9 2005 | 1ம் | 2ம் | 3ம் |
|---|---|---|---|
| தமிழ் | ஜெ.அன்ரன் கஜன் | சி.குளோடியஸ் டாவின் | ஏ.சாள்ஸ் |
| கணிதம் | எம்.அபினதாப் றொயிஸ்ரன் | கே.விக்னேஸ்வரன் | ஏ.நிரோராஜ் |
| ஆங்கிலம் | சி.குளோடியஸ் டாவின் | ஜெ.அலிஸ்ரன் நியுமன் | எஸ்.செல்வ நிரோஜன் |
| விஞ்ஞானம் | ஜெ.அன்ரன் கஜன் | டி.கிறிஸ்ரி யோ றஜித் | கே.விக்னேஸ்வரன் |
| சமுகக்கல்வி | ஜெ.அன்ரன் கஜன் | ஜெ.அலிஸ்ரன் நியுமன் | ஏ.நிரோராஜ் |
| சித்திரம் | ஜெ.அன்ரன் கஜன் | ஏ.நிரோராஜ் | ஏ.சாள்ஸ் |
| சங்கீதம் | எம்.அபினதாப் றொயிஸ்ரன் | சி.குளோடியஸ் டாவின் | டி.கிறிஸ்ரி யோ றஜித் |
| றோ.கத்தோ. | ஜெ.அன்ரன் கஜன் | எஸ்.செல்வ நிரோஜன் | ஜெ.அலிஸ்ரன் நியுமன் |
| இந்துசமயம் | கே.விக்னேஸ்வரன் | – | – |
| சுகாதாரம் | ஜெ.அன்ரன் கஜன் | ஏ.சாள்ஸ் | ஜெ.அலிஸ்ரன் நியுமன் |

| தரம் 9 2006 | 1ம் | 2ம் | 3ம் |
|---|---|---|---|
| தமிழ் | கே.பத்மராஜா | எம்.மரியலூாயிஸ் | எம்.சிவதரன் |
| கணிதம் | ஏ.அமிர்தஜஜுத் | எம்.சிவதரன் | – |
| விஞ்ஞானம் | எம்.சிவதரன் | கே.கிரிசாந் | எம்.மரியலூாயிஸ் |

| | | | |
|---|---|---|---|
| சமுகக்கல்வி | எம்.சிவதரன் | கே.கிரிசாந் | ஏ.அமிர்தஜஜுத் |
| சித்திரம் | ஏ.அமிர்தஜஜுத் | எம்.மரியலூாயிஸ் | ஏ.டெமின்கோ |
| சங்கீதம் | எம்.சிவதரன் | பி.மதிதரன் | கே.பத்மராஜா |
| றோ.கத்தோ. | ஏ.டெமின்கோ | ஏ.அமிர்தஜஜுத் | எம்.மரியலூாயிஸ் |
| இந்துசமயம் | எம்.சிவதரன் | பி.மதிதரன் | கே.பத்மராஜா |
| சுகாதாரம் | எம்.றொபின்சன் | எம்.மரியலூாயிஸ் | ஏ.டெமின்கோ |

| தரம் 10 2005 | 1ம் | 2ம் | 3ம் |
|---|---|---|---|
| தமிழ் | பி.விமல் றோய் | ஜி.பிரபாகர்றொபேட் | எஸ்.வினோத்ராஜ் |
| கணிதம் | கே.றொக்ஸன்பிரதீப் | பி.விமல் றோய் | என்.அனிஸ்ரன் |
| ஆங்கிலம் | ஜி.பிரபாகர் றொபேட் | பி.விமல் றோய் | இ.ஜி.லக்சன் |
| விஞ்ஞானம் | பி.விமல் றோய் | என்.அனிஸ்ரன் | கே.றொக்ஸன்பிரதீப் |
| சமுகக்கல்வி | எஸ்.வினோத்ராஜ் | பி.ராஜகாந் | ஏ.றெனா லக்சன் |
| சித்திரம் | பி.விமல் றோய் | ரி.உதயன் | ஏ.ஆர்.அனோஜன் |
| சங்கீதம் | என்.நியுட்டன் | – | – |
| றோ.கத்தோ. | பி.விமல் றோய் | ஜி.பிரபாகர் றொபேட் | ஏ.கிசன் |
| வர்த்தகம் | எஸ்.வினோத்ராஜ் | ஜி.பிரபாகர் றொபேட் | பி.விமல் றோய் |
| கடல்வளம் | ஏ.ஆர்.அனோஜன் | சபின்அருள்சேகர் | எம்.ஆல்தோ |

| தரம் 10 2006 | 1ம் | 2ம் | 3ம் |
|---|---|---|---|
| தமிழ் | ஜே.அலிஸ்ரன் நியுமன் | கே.விக்னேஸ்வரன் | ஜே.அன்ரன் கஜன் |
| கணிதம் | கே.விக்னேஸ்வரன் | ஜே.அன்ரன் கஜன் | ஏ.நிரோராஜ் |
| ஆங்கிலம் | சிகுளோடியஸ் டாவின் | ஜே.அலிஸ்ரன் நியுமன் | எஸ் செல்ல நிரோஜன் |
| விஞ்ஞானம் | எம்.அபினதாப்றொயிஸ்ரன் | ஜே.அன்ரன் கஜன் | கே.விக்னேஸ்வரன் |
| சமுகக்கல்வி | கே.விக்னேஸ்வரன் | ஜே.அலிஸ்ரன் நியுமன் | ஜே.அன்ரன் கஜன் |
| சித்திரம் | ஏ.நிரோராஜ் | ஜே.அன்ரன் கஜன் | |
| சங்கீதம் | ஜே.அலிஸ்ரன் நியுமன் | எம்.அபினதாப் றொயிஸ்ரன் | சிகுளோடியஸ் டாவின் |
| றோ.கத்தோ. | ஜே.அலிஸ்ரன் நியுமன் | ஜே.அன்ரன் கஜன் | ஏ.நிரோராஜ் |
| இந்துசமயம் | கே.விக்னேஸ்வரன் | – | – |
| வர்த்தகம் | கே.விக்னேஸ்வரன் | ஜே.அன்ரன் கஜன் | ஜே.அலிஸ்ரன் நியுமன் |
| கடல்வளம் | எஸ் செல்ல நிரோஜன் | டே.கிறிஸ்ரி யோ.றஜித் | ஆர்.இன்பதீபன் |

| தரம் 11 2005 | 1ம் | 2ம் | 3ம் |
|---|---|---|---|
| தமிழ் | இ.நித்திய நிரஞ்சன் | ஜெ.றெமின்ரன் | ஏ.பிறேம்ராஜ் |
| கணிதம் | எஸ்.ஜோகராஜ் | ஜெ.றெமின்ரன் | ஏ.பிறேம்ராஜ் |
| ஆங்கிலம் | ஜெ.ஜொனிஜான்சன் | ஜெ.றெமின்ரன் | எம்அமலஜஸ்ரின் |
| விஞ்ஞானம் | இ.நித்திய நிரஞ்சன் | ஏ.பிறேம்ராஜ் | இ.ஜி.ரியுமன் |
| சமுகக்கல்வி | இ.நித்திய நிரஞ்சன் | இ.ஜி.ரியுமன் | ஜெ.றெமின்ரன் |
| சித்திரம் | ஏ.யுகேந்திரன் | – | – |
| சங்கீதம் | இ.நித்திய நிரஞ்சன் | ஜெ.றெமின்ரன் | – |
| றோ.கத்தோ. | ஏ.ஜெனிற்றன் ஜோசவ் | ஜெ.றெமின்ரன் | இ.நித்திய நிரஞ்சன் |

| | | | |
|---|---|---|---|
| இந்துசமயம் | வி.டிவன்ராஜ் | எஸ்.ஜேகராஜ் | ஏ.பிறேம்ராஜ் |
| வர்த்தகம் | இ.நித்திய நிரஞ்சன் | ஏ.ஜெனிற்றன் ஜோசவ் | – |
| கடல்வளம் | ஏ.அல்பின்சன் | | |

| தரம் 11 2006 | 1ம் | 2ம் | 3ம் |
|---|---|---|---|
| தமிழ் | எஸ்.வினோத்ராஜ் | பி.வேணுதாஸ் | ஜி.பிரபாகர் றொபேட் |
| கணிதம் | எஸ்.வினோத்ராஜ் | ஜி.பிரபாகர் றொபேட் | ரி.யுலிடெனிஸ் |
| ஆங்கிலம் | எஸ்.வினோத்ராஜ் | ஜி.பிரபாகர் றொபேட் | இ.ஜி.லக்ஸ்மன் |
| விஞ்ஞானம் | எஸ்.வினோத்ராஜ் | ஜி.பிரபாகர் றொபேட் | லி.றொக்சன்பிரதுப் |
| சமுகக்கல்வி | எஸ்.வினோத்ராஜ் | ஜி.பிரபாகர் றொபேட் | வி.கணேஸ்வரன் |
| சித்திரம் | ஜி.பிரபாகர் றொபேட் | ஏ.ஆர்.அனோஜன் | எஸ்.வினோத்ராஜ் |
| சங்கீதம் | பி.வேணுதாஸ் | எம்.டினேஸ் | இ.ஜி.லக்ஸ்மன் |
| றோ.கத்தோ. | எஸ்.வினோத்ராஜ் | ஜி.பிரபாகர் றொபேட் | லி.றொக்சன்பிரதுப் |
| இந்துசமயம் | கே.குணஜுவன் | கே.சிவயோகராசா | வி.கணேஸ்வரன் |
| வர்த்தகம் | எஸ்.வினோத்ராஜ் | ஜி.பிரபாகர் றொபேட் | என்.அனிஸ்ரன் |
| கடல்வளம் | ஏ.ஆர்.அனோஜன் | ஏ.றெனா லக்ஸன் | ரி.யுலி டெனிஸ் |

| தரம் 12 2005 | 1ம் | 2ம் | 3 ம் |
|---|---|---|---|
| வர்த்தகம் | கே.புவி | – | – |
| கணக்கீடு | கே.புவி | ஆர்.தர்சனா | – |
| தமிழ் | என்.கிருசாந்தினி | ரி.பிரியதர்சினி | – |
| அளவையியல் | என்.கிருசாந்தினி | பி.கார்த்தீபன் | ரி.பிரியதர்சினி |
| இந்துநாகரீகம் | என்.கிருசாந்தினி | ரி.பிரியதர்சினி | – |
| கிறீஸ்தவம் | வி.பேடினன் பேஜின் | – | – |
| ஆங்கிலம் | கே.புவி | என்.கிருசாந்தினி | – |

| தரம் 12 2006 | 1ம் | 2ம் | 3ம் |
|---|---|---|---|
| வர்த்தகம் | ஏ.ஜெனிற்றன் ஜேசவ் | பி.விஜயலட்சுமி | – |
| கணக்கீடு | ஏ.ஜெனிற்றன் ஜேசவ் | பி.விஜயலட்சுமி | – |
| பொருளியல் | எஸ்.அருட்செல்வன் | எல்.தேவகௌரி | |
| தமிழ் | ரி.பிரியதர்சினி | ரி.பகீரதி | ஏ.நதிபா |
| அளவையியல் | எஸ்.அருட்செல்வன் | கே.சுகன்யா | எஸ்.ராஜகனீஸ்வரன்<br>எஸ்.யோகராஜ் |
| இந்துநாகரீகம் | எஸ்.அருட்செல்வன் | எல்.தேவகௌரி | ஏ.நதிபா |
| கிறீஸ்தவம் | ஜெ.றெமின்ரன் | ஏ.ரிசோபா | இ.ஜி.ரியுமன் |
| ஆங்கிலம் | ஜே.ஜெனிஜான்சன் | எம்.அமலஜஸ்ரின் | இ.ஜி.ரியுமன் |

| தரம் 13 2005 | 1ம் | 2ம் | 3ம் |
|---|---|---|---|
| வர்த்தகம் | எம்.சாருகாசன் | எம்.சுயாந் | ஏ.டார்மிசன் – |
| கணக்கீடு | எம்.சாருகாசன் | – | – |
| பொருளியல் | எம்.சாருகாசன் | – | – |
| தமிழ் | ஏ.தயானந் | எல்.ஜுன் யுட்சலா | எம்.சியாமளா |

| | | | |
|---|---|---|---|
| அளவையியல் | எம்.சியாமளா | – | – |
| இந்துநாகரீகம் | எம்.சியாமளா | – | – |
| கிறீஸ்தவம் | ஏ.தயானந் | எல்.யுட்சன் | எல்.ஜீன் யுட்சலா |

| தரம் 13 2006 | 1ம் | 2ம் | 3ம் |
|---|---|---|---|
| வர்த்தகம் | கே.புவி | – | – |
| கணக்கீடு | கே.புவி | – | – |
| பொருளியல் | கே.புவி | ஆர்.தர்சனா | |
| தமிழ் | ரி.பிரியதர்சினி | ரி.பகீரதி | எம்.சரண்ராஜ் |
| அளவையியல் | பி.கார்த்தீபன் | ரி.பிரியதர்சினி | எம்.அன்ரனி டிக்சன் |
| இந்துநாகரீகம் | ஆர்.கோகிதா | – | – |
| கிறீஸ்தவம் | எம்.அன்ரனிடிக்சன் | எஸ்.அஜித் செபராஜ் | – |
| ஆங்கிலம் | கே.புவி | | |

## வகுப்பு ரீதியாக பொதுத் தகமைக்குரிய பரிசு பெறும் மாணவர்

| தரம் | 2005 ல் | 2006 ல் |
|---|---|---|
| 6 | எஸ்.அருள்ராஜ் | எஸ்.நாகசுதன் |
| 7 | ஏ.அல்பிறட் நியுட்டன் | எஸ்.அருள்ராஜ் |
| 8 | கே.பத்மராஜா | ஏ.அல்பிறட் நியுட்டன் |
| 9 | ஜெ.அன்ரன் கஜன் | எம்.சிவதரன் |
| 10 | பி.விமல் றோய் | கே.விக்னேஸ்வரன் |
| 11 | இ.நித்திய நிரஞ்சன் | எஸ்.வினோத்ராஜ் |
| 12 Arts | என்.கிரிசாந்தினி | எஸ்.அருட் செல்வன் |
| 12 Com. | கே.புவி | ஏ.ஜொனிற்றன் ஜோசவ் |
| 13 Arts | எம்.சியாமளா | ரி.பிரியதர்சினி |
| 13 com. | எம்.சாருகாசன் | கே.புவி |

## 2006 ல் புலமைப்பரிசில்களைப் பெற்றமைக்கா பரிசு பெறும் மாணவர்கள்

| பெயர் | தரம் | புலமைப்பரிசில் |
|---|---|---|
| கே.விக்னேஸ்வரன் | 9 | ஜனாதிபதி புலமைப் பரிசில் |
| பி.விமல் றோய் | 10 | சிசு சாவிய |
| ஏ.கொன்சன் சேவியர் | 12 | சிசு சாவிய |
| கே.புவி | 12 | சிசு சாவிய |
| எம்.அன்ரனி டிக்சன் | 12 | சிசு சாவிய |
| எம்.சரண்ராஜ் | 12 | சிசு சாவிய |
| ஆர்.கலைச் செல்வன் | 12 | சிசு சாவிய |
| என்.கிரிசாந்தி | 12 | சிசு சாவிய |

## ௨006 ல் புலமைப்பரிசில்களைப் பெற்றமைக்கா பரிசு பெறும் மாணவர்கள்

| பெயர் | தரம் | புலமைப்பரிசில் |
|---|---|---|
| ஜெ.அன்ரன் கஜன் | 10 | சிசு சாவிய |
| கே.விக்னேஸ்வரன் | 10 | சிசு சாவிய |
| சி.வசந்தராஜ் | 6 | தரம் 5 புலமைப்பபரிசில் |
| எஸ்.நாகசுதன் | 6 | தரம் 5 புலமைப்பபரிசில் |

## சிறந்த பொதுப்பாீட்சை பெறுபேற்றிற்காக பரிசு பெறும் மாணவர்கள்.

| பாீட்சை | 2005 | பெறுபேறு | 2006 | பெறுபேறு |
|---|---|---|---|---|
| க.பொ.த சா.த | ஜெ.றெமின்ன் | 2A 1B 2C 5S | எஸ்.வினோத்ராஜ் | 5A2C3S |
| கா.பொ.த (உ.த.) கலை | ரி.துஸ்யந்தி | 3A | ஏ.தயானந் | 1A 1B S |
| கா.பொ.த (உ.த.) வர்த்தகம் | ஏ.பிறின்சன் | 1B 2C | எம்.சாருகாசன் | 2B 1C |

## சிறந்த நூலகப் பயன்பாட்டிற்காக பரிசுபெறும் மாணவர்கள்

| பிரிவு | 2005 | 2006 |
|---|---|---|
| கீழ்ப்பிரிவு | பி.மதிதரன் | எம்.டினோசன் |
| மேல்ப்பிரிவு | கே.புவி | ஏ.நதீபா |

## உயர் கல்விக்கு தெரிவானமைக்காக பரிசு பெறும் மாணவர்கள்

| மாணவா பெயர் | பாடம் | நிறுவனம் | உயர்தர ஆண்டு |
|---|---|---|---|
| 1. தெ.துஸ்யந்தினி | கலை | யாழ் பல்கலைக்கழகம் | 2005 |
| 2. ஜெ.கிரிசேந்திரா | ஆரம்பக் கல்வி | வவுனியா கல்வியியல் கல்லூாி | 2005 |
| 3. மா.தனுசா | ஆரம்பக் கல்வி | வவுனியா கல்வியியல் கல்லூாி | 2005 |
| 4. டெனிஸ்ரன் | ஆரம்பக் கல்வி | வவுனியா கல்வியியல் கல்லூாி | 2005 |

## *சிறந்த மெய்வல்லுனர் பரிசு பெறும் மாணவர்கள்*

| வயது | 2005 | 2006 |
|---|---|---|
| 13 க்கு கீழ் | இ.எமில்சன் | இ.எமில்சன் |
| 15 க்கு கீழ் | ஏ.அமலதாஸ் | எஸ்.டரன்ஸ் அன்ரனி |
| 17 க்கு கீழ் | எஸ்சுகிதரன் | கே.ஜெபனேசன் |
| | ஏ.ஆனந்தராஜா | – |
| 19 க்கு கீழ் | பி.பரிதுஸ் | கே.புவி , ஏ.ஆனந்தராஜா |
| | ஜெ.லின்ரன் யதுஸ் | ஜி.பிரபாகர் றொபேட் |
| 21 க்கு கீழ் | யு.தனராஜ் | எம்.சுயாந், பி.பரிதுஸ் |
| | – | ஜே.ஜோசவ் கிரிசேந்திரா |
| பெண்கள் | ஜெ.ஜுன் யுட்சலா | ஜெ.ஜுன் யுட்சலா |

## *துறைசார் திறமைக்காக பரிசுபெறும் மாணவர்கள்*

| விடயம் | 2005 | 2006 |
|---|---|---|
| உதைபந்தாட்டம் | எக்ஸ்.ஜினோ சாள்ஸ் | எஸ்.தேவராசா |
| கரப்பந்தாட்டம் | எம்.சாருகாசன் | ஜே.லின்ரன் சதுஸ் |
| கிரிக்கட் | கே.கதுசன் | ஜி.பிரபாகர் றொபேட் |
| பட்மின்ரன் | எம்.சுயாந் | ரி.யுலி டெனிஸ் |
| சதுரங்கம் | கே.புவி | எம்.அமலஜஸ்ரின் |
| உடற்பயிற்சி | எம்.சுயாந் | ஏ.சுலக்சன் |
| சகல துறை | ஜே.ஜோசவ் கிரிசேந்திரா | ஏ.ஆனந்தராஜா |
| சாரணியம் | எஸ்.குகதர்சன் | கே.புவி |
| சென்.ஜோண்ஸ் அம்புலன்ஸ் | ரி.டேமியன் தயாளராஜ் | எஸ்அஜித்செபராஜ் |

2005 ம் ஆண்டில் ***கல்லூரியின் சிறந்த மாணவன்*** விருது பெறும் மாணவன்

**Antonian of the year 2005 - *செல்வன் கே.புவி***

2006 ம் ஆண்டில் ***கல்லூரியின் சிறந்த மாணவன்*** விருது பெறும் மாணவன்

**Antonian of the year 2006 - *செல்வன் ஜே.லின்ரன் சதுஸ்***

2005 ம் ஆண்டின் ***கல்லூரியின் சிறந்த ஆசிரியர்*** விருது பெறும் ஆசிரியர்

**Staff of the year 2005 - *திருமதி. ப. தேவா***

2006 ம் ஆண்டின் ***கல்லூரியின் சிறந்த ஆசிரியர்*** விருது பெறும் ஆசிரியர்

**Staff of the year 2006 - *திரு.கே.கியோமர்***

| Year | Antonian of the Year | Staff of the Year |
|---|---|---|
| 2002 | Mas.A.Anistan Jeyakumar | Mr.P.W.Navarajah |
| 2003 | Mas.J.J.Kirisenthira | Mr.S.Sathananthan |
| 2004 | Mas.R.Anosanth | Mrs.C.P.S.W.Navarajah |
| 2005 | Mas.K.Puvi | Mrs.P.Theva |
| 2006 | Mas.G.A.Lintan Jathees | Mr.K.Kiomar |

விளையாட்டு முடிவுகள் 2005

## தேசிய மட்டத்தில் ௩ம் இடத்தைப்பெற்ற உடற்பயிற்சி அணி விபர

| பெயர் | தரம் | | பெயர் | தரம் |
|---|---|---|---|---|
| 1. ம.சுஜாந் | 12 | | 16. ம.அ.நிரோஜன் | 11 |
| 2. ம.சாருகாசன் | 12 | | 17. வ.பியந்தன் | 11 |
| 3. சே.யஸ்ரின் ஜேசுராஜ் | 11 | | 18. ச.குகதர்சன் | 11 |
| 4. ஜோ.யுலியஸ் | 11 | | 19. ஜோ.ப °.றோபேட் | 11 |
| 5. எ.நித்திய நிரஞ்சன் | 10 | | 20. பி.விமல்றோய் | 10 |
| 6. ம.மரியலினஸ் | 10 | | 21. ம.முரளிஸ்வரன் | 10 |
| 7. கி.புவி | 11 | | 22. பி.பிரசாத் | 10 |
| 8. ஜெ.ரெமின்ரன் | 10 | | 23. அ.றெஜிகரன் | 10 |
| 9. ப.பரிரிஸ் | 11 | | 24. அ.ஆனந்தராசா | 10 |
| 10. ம.டிக்சன் | 10 | | 25. தே.யுலிடெனிஸ் | 10 |
| 11. லு.ஜே.யுட்சன் | 11 | | 26. அ.சுலக்சன் | 10 |
| 12. தே.சகாயநாதன் | 10 | | 27. சி.றேகன் | 10 |
| 13. அ.ஜெனோசியஸ் | 10 | | 28. அ.றொ.அனோஜன் | 10 |
| 14. ஜோ.டார்மிசன் | 11 | | 29. அ.யுகேந்திரன் | 10 |
| 15. சே.தேவராசா | 10 | | 30. ம.டினேஸ் | 10 |

## பெரு விளையாட்டுக்கள் ௨௦௦௫

| பிரிவு பெயர் | உதைபந்து | கரப்பந்து | கிரிக்கெட் | பட்மின்ரன் | உடற்பயிற்சி | சதுரங்கம் |
|---|---|---|---|---|---|---|
| 15 வயது | கோ –1<br>வ –1 | கோ –1<br>வ –1 | கோ –1<br>வ –1 | கோ –1<br>வ –1 | | வ –2 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 17 வயது | கோ –1<br>வ –1 | கோ –1<br>வ –1 | | | | |
| 19 வயது | கோ –1<br>வ –1 | கே – 2<br>வ –3 | வ –2 | வ –1 | வ –1<br>மாவ –2<br>மாக –1<br>தே –2 | வ –2 |

## பெரு விளையாட்டுக்கள் 2006

| பிரிவு பெயர் | உதைபந்து | கைப்பந்து | கிரிக்கெட | பட்மின்ரன் | உடற்பயிற்சி | சதுரங்கம் |
|---|---|---|---|---|---|---|
| 15 வயது | கோ –1<br>வ –1 | கோ –1<br>வ –1 | கோ –1<br>வ –1 | கோ –1<br>வ –1 | | வ –2 |
| 17 வயது | கோ –1<br>வ –1 | கோ –1<br>வ –2 | | | | |
| 19 வயது | கோ –1<br>வ –1<br>மாவ –2 | கோ –2<br>வ –3 | வ –3 | வ –1 | வ –1<br>மாவ –1<br>மாகா –1 | வ –2 |

கோ – கோட்ட மட்டம் வ – வலயமட்டம் தே – தேசிய மட்டம்
மாவ – மாவட்டமட்டம் மா – மாகாணமட்டம்

## English Day 2005

| Division/Name | Recitation | Dialogue Drama |
|---|---|---|
| Grade 6<br>P.Robin Roy<br>S.Arul Raj | <br>Div-2, Z-1<br>Div-1, Z-2 | |
| Grade 8 | | |

| | | |
|---|---|---|
| A.Arunraj | Div-3 | |
| Grade 11<br>E.G.Tuman | <br>Div-3 | |
| Junior Boys | | Div-1, Z-1, Dis-3 |

Div- Divisional Level , Z - Zonal , Dis.-District

**English Day 2006**

| Division/Name | Recitation | Copy writing | Group Singing | Drama |
|---|---|---|---|---|
| **Grade 6**<br>J.Nobert<br>A.Danstan | <br>Div-2, Z – 3<br>Div-3 | | | |
| **Grade 7**<br>J.Raj Rosintan<br>S.Arulraj | <br>Div-1, Z – 1<br>Div-3 | | | |
| **Grade 8**<br>E.Vinoth<br>A.Newtan | <br>Div-2 | | | |
| **Grade 9**<br>A.Arulraj | Div-3 | | | |
| **Grade 10**<br>S.Selvanirojan<br>A.Alistan Newman | <br>Div-1, Z - 3 | <br><br>Div-3 | | |
| **Grade 11**<br>E.G.Luxman<br>E.G.Prabahar<br>Georgr | <br>Div-1, Z – 1<br><br>D-3 | | | |
| **Grade 6-9**<br>Junior Boys | | | Div-1,<br>Z – 1 | Div-1,<br>Z – 1,<br>Dis-3 |
| **Grade 10 – 13**<br>Senior Boys | | | <br>Div-1,<br>Z – 1 | |

## தமிழ்த்தினப் போட்டி 2006

| பிரிவு / பெயர் | தனி இசை | பேச்சு | கவிதை | நாடகம் எழுதுதல் | வில்லுப் பாட்டு | விசேட கூத்து |
|---|---|---|---|---|---|---|
| கீழ் பிரிவு<br>ரி.கெயின்சன் | கோ – 2<br>வ –2 | | | | | |
| சி.அருள்ராஜ் | | கோ –1<br>வ –1 | | | | |
| மேல் பிரிவு<br>பேடினன்<br>ஜின் | | | கோ –1<br>வ –1<br>மாவ –1 | | | |
| .ஞா.வக்ஸ்மன் | | | | கோ –1<br>வ –1 | | |
| திறந்த போட்டி | | | | | கோ –1<br>வ –1<br>மாவ –2 | கோ –1<br>வ –1<br>மாவ –2 |

## வர்த்தக விஞ்ஞான போட்டி 2005

| பிரிவு பெயர் | அறிவினை அளவிடல் | கட்டுரை எழுதுதல் | பேச்சு போட்டி |
|---|---|---|---|
| தரம் 10, 11 | | | |
| எஸ்.வினோத்ராஜ | வ – 4 | | |
| தரம் 12 – 13 | | | |
| கி. புவி | வ – 2 | | |
| ர.தர்சனா | வ – 4 | | |
| யோ.ஜெனிற்றன் யோசவ் | | வ – 4 | |
| கி.புவி | | | வ – 1 |
| யோ.ஜெனிற்றன்யோசவ் | | | வ – 2 |

| STAFF 2005 | | | |
|---|---|---|---|
| 01 | Rev.Fr.J.A.Jesuthas | BA, BTh | PGDE, MA |
| 02 | Mr.P.W.Navarajah | | Spl.Trd(Eng) |
| 03 | Mr.C.L.W.Patrick | BSc | PGDE |
| 04 | Mrs.C.P.S.W.Navarajah | B.Sc | PGDE |
| 05 | Miss.P.Kumaravelu | B Com | PGDE |
| 06 | Mr.P.Balakirishnan | BA | Spl Trd(Com) |
| 07 | Mr.P.Kokulavasan | BA | Spl Trd(Maths) |
| 08 | Mr.S.Sathananthan | | Dip-in-Teaching(Maths) |
| 09 | Mr.R.J.Sutharson | BCom | |
| 10 | Mr.S.Somanathan | BBA | |
| 11 | Mrs.A.J.Britto | BA | |
| 12 | Mrs.P.Theva | BA(Hon) | |
| 13 | Mrs.V.A.Arulseelan | | Spl Trd(R.C) |
| 14 | Mrs.F.J.Collins | | Dip-in-Music |
| 15 | Mr.S.Pathmarasa | BA | PGDE, M Phil |
| 16 | Rev.Fr.Soban Rufus | BTh, BPh | |
| 17 | Miss.K.Sengani | | Dip-in- Teaching(English) |
| 18 | Mr.R.Nageswaran | BA | PGDE |
| 19 | Mr.R.Sasikumar | Bcom | |
| 20 | Mrs.S.Nageswarabala | BA | |
| 21 | Mrs.S.Muhunthan | BA | |
| 22 | Mr.S.Jasotharan | | Dip-in-Fisherish |
| 23 | Miss.K.Nadarajah | BA | |
| 24 | Miss.A.Arulanantham | BA | |
| 25 | Miss.P.Sathasivasharma | Bcom (Hon) | |
| 26 | Mrs.N.Kishokumar | | Spl Trd (Science) |
| 27 | Mrs.S.Thirumaran | BBA | |
| 28 | Miss.N.Ariyaratnam | BA(Hon) | |
| 29 | Mrs.N.Nanthakumar | BBA(Hon) | |
| 30 | Miss.T.Kathirgamathambi | | Dip-in-IT |
| 31 | Mr.K.Kiomar | | Dip-in-Teaching(Tamil) |
| 32 | Miss.G.Sharmila | | Spl Trd(Art) |
| 33 | Mr.V.Vishvalingam | | Dip-in-Fisherish |
| 34 | Mr.S.Sunmarsing | G.C.E(A/L) | Volunteer |
| 35 | Mr.S.Alphones | BA(Hon) | Management Assistant |
| 36 | Mrs.K.Pirpaparan | BA | Programme Assistant |
| 37 | Mr.J.Rajkumar | | School Labourer |
| 38 | Mr.S.Sebastiampillai | | School Labourer |
| 39 | Mr.K.Mathiyalagan | | Lab Assistant |
| 40 | Mr.X.M.Brohier | | KKS |

| STAFF 2006 | | | |
|---|---|---|---|
| 01 | Rev.Fr.J.A.Jesuthas | BA, BTh | PGDE, MA |
| 02 | Mr.P.W.Navarajah | | Spl.Trd(Eng) |
| 03 | Miss.P.Kumaravelu | BCom | PGDE |
| 04 | Mrs.C.P.S.W.Navarajah | B.Sc | PGDE |
| 05 | Mr.P.Balakirishnan | BA | Spl Trd(Com) |
| 06 | Mr.P.Kokulavasan | BA | Spl Trd(Maths) |
| 07 | Mr.S.Sathananthan | | Dip-in-Teaching(Maths) |
| 08 | Mr.R.J.Sutharson | BCom | PGDE |
| 09 | Mr.S.Somanathan | BBA | |
| 10 | Mrs.A.J.Britto | BA | |
| 11 | Mrs.P.Theva | BA(Hon) | |
| 12 | Mrs.A.R.Arulseelan | | Spl Trd(R.C) |
| 13 | Mrs.F.J.Collins | | Dip-in-Music |
| 14 | Mr.S.Pathmarasa | BA | PGDE, M Phil |
| 15 | Rev.Fr.Soban Rufus | BTh,BPh | |
| 16 | Miss.K.Sengani | | Dip-in- Teaching(English) |
| 17 | Mr.R.Nageswaran | BA | PGDE |
| 18 | Mr.S.Jasotharan | | Dip-in-Fisherish |
| 19 | Miss.K.Nadarajah | BA | |
| 20 | Miss.A.Arulanantham | BA | |
| 21 | Mrs.N.Kishokumar | | Spl Trd(Science) |
| 22 | Miss.P.Sathasivasharma | Bcom(Hon) | |
| 23 | Mrs.S.Thirumaran | BBA | |
| 24 | Miss.G.Sharmila | | Spl Trd(Art) |
| 25 | Miss.N.Ariyaratnam | BA(Hon) | |
| 26 | Mrs.S.Nanthakumar | BBA(Hon) | |
| 27 | Miss.T.Kathirgamathambi | | Dip-in-LS&IT |
| 28 | Mr.K.Kiomar | | Dip-in-Teaching(Tamil) |
| 29 | Mr.V.Vishvalingam | | Dip-in-Fisherish |
| 31 | Mr.S.Alphones | BA(Hon) | Management Assistant |
| 32 | Mr.K.Mathiyalakan | | lab assitant |
| 33 | Mr.J.Rajkumar | | School Labourer |
| 34 | Mr.S.Sebastiampillai | | School Labourer |
| 35 | Mr.X.M.Brohier | | KKS |

## தமிழ் தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே

ஏழ்கடல் வைப்பிலுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே

எங்கள் தழிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே

சூழ்கலி நீங்க தமிழ்மொழி ஓங்க
துலங்குக வையகமே

தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே

வானம் அறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே

***COLLEGE ANTHEM***

***Let's sing this tuneful Anthem hearty***
***Sing it loud with heart sincere..***
***True to Christ, our School and country,***
***Onwards we shall march secure.***

***Chorus***

***Give the utmost for the highest,***
***Let that always be our aim.***
***Strive to gain from life the fullest,***
***For that's real fame.***

***Rally round the Alma Mater,***
***Loyal, honest, faithful and kind,***
***Men of truth and men of honour,***
***Strong in body, sprit and mind.***

***Chorus***

***Give the utmost for the highest,***
***Let that always be our aim.***
***Strive to gain from life the fullest,***
***For that's real fame.***